1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) ஊரக வளர்ச்சித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் 13-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

1977-78 ஆம் ஆண்டு மற்றும் 1978-79 ஆம் ஆண்டுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் வருவாய் வரவினங்கள் குறித்த பொதுக் கணக்கு அளித்த 27-வது அறிக்கை, 7-வது பேரவையில் தொழில் துறை பற்றிய பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் 14-வது அறிக்கையை அளிக்கின்றேன்.

முற்பகல் 10-45

5. சட்டமுன் வடிவுகள்.

(அறிமுகம் செய்தல்)

(அ) நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழங்குதல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் அறிமுகம் செய்தல். 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30, உள்விதி 3-ன்கீழ் பின்வரும் தீர்மானத்தை மொழிகிறேன் :

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்டமுன் வடிவுகள்-அறிமுகம் செய்தல் என்ற தலைப்பின்கீழ், வரிசை எண் 2, 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு பின்னர் அறிமுகம் செய்யப்படலாம்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி.)